# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஆகஸ்ட் 25, 2018 Weekly E-paper ● August 25, 2018


# தி.மு.க. வின் எதிரி அ.தி.மு.க. வா?


● சுப.வீரபாண்டியன்

வரும் 30 ஆம் தேதி சென்னையில் நடைபெறவிருக்கும், தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் வணக்கம் கூட்டத்தில் பாஜக வின் தலைவர் அமித்ஷா அழைக்கப்பட்டுள்ளார். அவரும் ஒப்புதல் தெரிவித்து அழைப்பிதழும் வெளிவந்துவிட்டது. அதனையொட்டி, ஊடகங்கள் முழுவதும் அது குறித்தே விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

திமுக வும், பாஜக வும் நெருங்கி வருகின்றன என்பதற்கான அடையாளமே இது என்று சிலர் தங்கள் கருத்தைப் பதிவிடுகின்றனர். திமுகவின் நற்பெயருக்கும், நம்பகத்தன்மைக்கும் கேடு விளைவிக்கக்கூடிய கருத்தாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

தில்லியிலும், அண்டை மாநிலங்களிலும் எதிரெதிர்க் கட்சியினர் கூட, பண்பாட்டு நிகழ்வுகளிலும், துக்க நிகழ்ச்சிகளிலும் கட்சி எல்லையைக் கடந்து ஒன்று கூடுகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான், அந்த நாகரிகத்தைப் பார்க்க முடியவில்லை. எல்லாவற்றிலும் இங்கு கட்சி அரசியலே தலைதூக்கி நிற்கிறது என்று பலரும் குறை கூறுவதைக் கேட்டுள்ளோம். இன்று அனைத்துக் கட்சிகளும் ஒரு மேடைக்கு வந்து, மறைந்த தலைவரின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்வதைக் கண்டு வரவேற்று மகிழாமல், இதற்கும் ஓர் அரசியல் நோக்கம் கற்பிப்பது சரிதானா?

இந்த விமர்சனம் சரியானது



இல்லையென்றாலும், இது தொடர்பாக வைக்கப்படுகின்ற இரண்டு வினாக்களுக்கு நாம் விடை சொல்ல வேண்டியுள்ளது. சென்ற ஆண்டு தலைவரின் பிறந்த நாள் விழாவிற்கு பாஜக அழைக்கப்படவில்லை. இப்போது மட்டும் ஏன் என்பது ஒரு வினா. பாராட்டு விழாவிற்கு அனைவரையும் அழைக்க வேண்டியதில்லை. ஆனால் ஒரு துயரம் என்று வரும்போது அனைவரையும் அழைப்பதில் எந்தப் பிழையுமில்லை. தலைவர் இறந்தபோது பிரதமரே இங்கு வந்தார். அதே போல, வாஜ்பாய் இறந்தபோது தளபதி அங்கு சென்றார். இது நல்ல பண்பாடுதான்.

இந்த இடத்தில் இன்னொரு வினாவும் முன்வைக்கப்படுகிறது. துக்கத்தில் கட்சி பார்க்க வேண்டாமென்றால், புகழ் வணக்கக் கூட்டத்திற்கு அதிமுக வையும் அழைத்திருக்கலாம் இல்லையா என்பதே அவ்வினா. இந்தப் பார்வையில் நியாயம் உள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. அதிமுக வைப் பின்னிருந்து இயக்கும் பாஜக வையே அழைத்த பிறகு, அவர்களின் கைப்பாவையாக உள்ள அதிமுக வையும் அழைத்திருக்கலாம்தான்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பர், தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் பேசும்போது, காங்கிரஸ் பாஜகவுடன் கூட்டு சேராது, திமுக, அதிமுகவுடன் கூட்டு சேராது என்பதைத் தவிர, மற்ற அனைவரும் யாரும் யாருடனும் கூட்டு சேர்வார்கள் என்கிறார். அதாவது காங்கிரசுக்கு பாஜக மட்டுமே எதிரி, திமுகவுக்கு அதிமுக மட்டுமே எதிரி என்பதாக இதன் பொருள் அமைகிறது. பலரும் அவ்வாறே எண்ணிக் கொண்டுள்ளனர்.

கொள்கைகளின் அடிப்படையில் நுணுகிப் பார்த்தால் இரண்டுமே முழு உண்மையில்லை என்பது புரியும். காங்கிரசும், , பாஜகவும் மதவாதம், மதச் சார்பின்மை என்னும் அடிப்படையில் வேறுபட்டு நிற்கும் கட்சிகளே என்றாலும், அனைத்துச் சித்தாந்தங்களிலும்

...முன்பக்கத் தொடர்ச்சி

முரண்பட்டவை அல்ல. ஈழச் சிக்கல், ஆட்சிமொழிச் சிக்கல், உலகமயமாதல்போன்ற பலவற்றில் ஒத்த கருத்துடையவைகளே! அதே போல, திமுக, அதிமுக இரண்டும் நேர் எதிரான சித்தாந்தம் உடையவை என்று கூற முடியாது. அதிமுக எந்த சித்தாந்தத்தையும் முன்வைக்காத கட்சி என்பதால், அங்கே சித்தாந்த மோதலுக்கே இடமில்லை.

தமிழக அரசியலைப் பொறுத்தவரையில், திமுக, காங்கிரஸ் ஆகியனவே 1971 வரையில் எதிரெதிர்க் கட்சிகளாகத் தேர்தல் களத்தில் நின்றன. 1972இல் அதிமுக என்று ஒரு கட்சி தோன்றிய பின்னரே, களநிலவரம் மாறியது. அது இன்றுவரை தொடர்கிறது. எனினும், ஜெயலலிதா இறப்புக்குப் பின், அக்கட்சி தன் நடைமுறை வீரியத்தையும் இழந்துவிட்டது.

இப்போது சாரமற்றுப் போன அதிமுகவைப் பின்னணியிலிருந்து பாஜகவே இயக்கி வருகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. பா.ஜ.க. தன் மனுநீதிக் கொள்கையைத் தமிழ்நாட்டில் நிலைநாட்ட விரும்புகிறது.

திராவிட இயக்கம் சமூக நீதிக்காகவே பிறந்த இயக்கம். திராவிட இயக்கத்தின் அரசியல் நீட்சியாக இன்று தமிழகத்தில் வலிமையுடன் இருக்கும் கட்சி திமுகவே. ஆதலால், அதிமுக என்னும் போலியான, உள்ளீடற்ற ஒரு கட்சி இனி திமுகவிற்கு எதிரியாக இருக்க முடியாது.

கொள்கை அடிப்படையில் சமூக நீதிக்கும், மனு நீதிக்கும் இடையில்தான் முரண்பாடும் மோதலும் உள்ளன. ஆதலால், திமுகவின் எதிர்கால அரசியல் எதிரி, அதிமுக இல்லை, பாஜகதான் என்பதை முடிவு செய்து அறிவிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது! ●



# மூளையெங்கும் மூடத்தனம்

**மா.உதயகுமார்**

கேரளாவில் பெருவெள்ளம் ஏற்பட்டு மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். உலகில் மனிதநேயம் உயிர்ப்போடு இருக்கிறது என்பதற்குச் சாட்சியாக கேரள மக்களுக்கு அனைத்துத் தரப்பினரும் உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். இது ஒருபுறம் இருக்க மறுபுறம் மறுபடியும் இது போன்ற இயற்கைப் பேரிடரை எப்படிப் பாதிப்பின்றி எதிர்கொள்வது என்று அறிவியலின் துணை கொண்டு அறிஞர்களும், அரசுகளும் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், மனிதாபிமானமும் இல்லாமல், மதியுமில்லாமல் சபரி மலையில் பெண்களை அனுமதிக்கக் கோரி வழக்குத் தொடர்ந்திருப்பதால் தான் அய்யப்பனின் கோபத்திற்கு உள்ளாகியிருக்கிறோம் என்றும் மாட்டுக் கறி உண்ணுவோர் அதிகம் இருப்பதால் தான் இந்தப் பேரழிவு என்றும் சிலர் பேசித் திரிகின்றனர். புறக்கணித்துவிட்டு போகக் கூடியவர்களா அந்தச் சிலர்? உலகின் பெரிய குடியரசு நாடான இந்தியாவை ஆளும் வர்க்கத்தினரல்லவா அந்தச் சிலர். இன்றைய படித்த இளைஞர்கள், கடவுள் நம்பிக்கை உடையவர்கள் கூட இதனைக் கேட்டுச் சிரிக்கின்றனர். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருப்பதை நாம் பார்க்கிறோம். அதனால் இதனை நாம் எளிதில் கடந்து சென்றுவிட முடியாது.



மக்கள் தொகைப் பெருக்கம், தொழிற்கூடங்களின் பெருக்கம் இவற்றோடு இயற்கைக்கும் இடர்ப்பாடு இல்லாமல் இயங்குவது குறித்து உலக நாடுகள் எல்லாம் திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கு நம்மை ஆளுவோரின் சிந்தனையும் செயலும் இப்படி இருக்கிற போது, எப்படி இந்தச் சமூகம் முன்னேறும் என்கிற கேள்வி எழுகிறது.

கேரளத்தின் நிலை இப்படி இருக்க, இங்கு தமிழ்நாட்டில் அதைப் பயன்படுத்தி எப்படியாவது சில கொலைகளை நிகழ்த்திவிட வேண்டும் என்று துடிக்கின்றனர். வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகளைப் பற்றிக் கவிஞர் மனுஷ்ய புத்திரன் எழுதிய ஒரு கவிதைக்கு மத உள்நோக்கம் கற்பித்து அவருக்குக் கொலை மிரட்டல்கள் விடுத்து வருகின்றனர். குறிப்பாக பா.ஜ.க. வின் தேசியச் செயலாளர் ஹெச்.ராஜா. இன்றைக்கு நாகரிகம் கருதி எந்த மேடையிலும் பேச்சாளர்கள் அவர் பெயரைக் கூட உச்சரிப்பதில்லை. இந்த அளவிற்குப் பெயர் கூட புறக்கணிக்கப்படும் நபர் வரலாற்றில் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். இவ்வளவு கண்டனங்களுக்கு உள்ளான போதிலும் அந்தக் கட்சி அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறதென்றால் அதில் எவ்வளவு பெரிய ஆபத்து இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். பொதுவாக அரசியல் கட்சிகள் குழப்பத்தை விளைவிக்கும் என்று விமர்சகர்கள் சொல்வதுண்டு. ஆனால் தாங்கள் கால் ஊன்றுவதற்கு எப்படியாவது கொலைகளை நடத்தத் துடிக்கும் அரசியல் கட்சி பா.ஜ.க மட்டும் தான். பா.ஜ.க வின் வரலாறே அதற்குச் சான்று.

ஊடகப் பெண்களை இழிவுபடுத்திய எஸ்.வி.சேகரைக் கைது செய்யக்கோரி எத்தனை வழக்குகள், எத்தனை போராட்டங்கள். கோவிலில் இருக்கும் உற்சவர் பவனி வருவதைப் போல ஒரு நாள் நீதிமன்றத்திற்குப் பவனி வந்து சென்றுவிட்டார். கவிஞர் மனுஷ்ய புத்திரன், தனக்கு மிரட்டல் விடுபவர்களின் விபரங்களையும், அதற்குத் தூண்டுபவர்களைப் பற்றியும் காவல் துறையிடம் புகார் அளித்தும் அவர்கள் யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மூளையெங்கும் மூடத்தனம், செய்வதெல்லாம் சர்வாதிகாரம் இதுவே இன்றைய மத்திய அரசை ஆளும் பா.ஜ.கவின் பணி. இந்த நாட்டைப் பிடித்த பிணி. ●



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


## தலைவர் கலைஞருக்குப் பேரவையின் புகழ் வணக்கம்!



**பொ**துச்செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன் தலைமையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநில, மண்டல, மாவட்டப் பொறுப்பாளர்கள் 18.8.2018 அன்று மறைந்த தலைவர் கலைஞர் நினைவிடத்திற்கு ஊர்வலமாகச் சென்று புகழ் வணக்கம் செய்தனர்.

## திராவிடத் தமிழர் கட்சியினருடன் தோழர் சுப. வீரபாண்டியன்



**தி**ராவிடர் தமிழர் கட்சியின் தலைவர் தோழர் வெண்மணி, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன் அவர்களை 24.8.2018 அன்று பேரவை அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். அவருடன் அக்கட்சியின் ஆணைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இளமதி, தோழர்கள் பேரறிவாளன், ஆதவன், தங்கவேல், ஆகியோர் உடன் இருந்தனர். அப்பொழுது திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநிலப் பொருளாளர் எழில். இளங்கோவன், பொறுப்பாளர்களான தோழர்கள் எட்வின், வலசை கணேசன், சாந்த சீலன் ஆகியோரும் உடன் இருந்தார்கள்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சமூக உரிமை மீறல்

**ம**னித உரிமை மீறல் குறித்து உலகமே பேசிக்கொண்டிருக்கிறது.

உரிமை மீறல் என்பது மனிதர்களுக்கு மட்டுமன்று. சாதி என்ற பெயரில் சமூகங்களிடத்திலும் அது இருக்கத்தான் செய்கிறது.

மனிதனை வண்டியில் வைத்து, இன்னொரு மனிதன் இழுப்பது மனித உரிமை மீறல் சார்ந்த இழிவு.

இந்த இழிவைத் தமிழகத்தில் திமுக ஆட்சியின்போது தலைவர் கலைஞர் நீக்கினார்.

ஆனால் நீக்கமுடியாத ஒரு சமூக உரிமை மீறல் எந்த நாட்டிலும் இல்லாமல் இந்தியாவில் மட்டும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

இந்தியா முழுவதிலும், அந்தந்த மாநிலத்தில் வெவ்வேறு பெயர்களில் சாதிகள் இருந்தாலும், 'மாதிகா' என்ற பெயரில் வாழும் சமூக மக்கள் கையால் மலம் அள்ளும் இழிவான வேலையைச் செய்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் வாழும் அருந்ததியர் சமூக மக்களில் 70 சதவீதம் இந்த இழிதொழிலைச் செய்கிறார்கள்.

அதனால் அந்த மக்களின் உடல் நலம் பாதிப்படைகிறது. அவர்கள் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. மொத்தத்தில் அந்தச் சமூகத்தின் எதிர்காலமே கேள்விக்குறியில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்த மக்களின் கையால் மலம் அள்ளும் வேலைகுறித்து எந்த ஒரு புள்ளி விவர ஆவணமும் அரசாங்கத்தில் பராமரிக்கப்படவில்லை.

காரணம் தமிழ்நாட்டில் கையால் மலம் அள்ளும் வேலை தடை செய்யப்பட்டிருக்கிறது, அப்படி ஒரு வேலை இங்கே நடக்கவில்லை என்பதைச் சொல்வதற்குத்தான்.

உண்மையில் தடைசெய்து இந்த வேலையை நீக்க முடியாது.

சமூக அக்கறையுடன் சொல்வதானால், அந்த மக்களுக்கு மாற்று வேலை கொடுத்துவிட்டு அந்த வேலையிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தவேண்டும்.

பாதாளச் சாக்கடைகளில் இறங்கிச் சுத்தப்படுத்துவோருக்கும் இது பொருந்தும்.

நவீன இயந்திர மைய காலத்தில் இது ஒன்றும் முடியாததன்று.

மனித உரிமை மீறல் என்பது ஒருவரை பாதிக்கும். சமூக உரிமை மீறல் என்பது மக்களை பாதிக்கும்.

## மணவிழா வாழ்த்து




**22**.8.2018 அன்று மன்னார்குடி ஏ.கே. திருமண மண்டபத்தில் பி. முருகானந்தம் - ம. ரோஜா ஆகியோரின் சாதி மறுப்புச் சுயமரியாதைத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணவிழாவிற்குத் தலைமையேற்று மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள். திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் தோழர்கள் வே. இளங்கோவன், அனுப்பட்டி பிரகாசு, முகில் நிலா மணிகண்டன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூல் அறிமுகம்

# ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியாரா?

**“காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ**
**கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ”**
**– புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.**

வரலாறு, மாமனிதர்களையே நினைவில் வைத்துக் கொள்கிறது. அத்தகைய மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றில் எத்தனை முறை பொய் என்னும் சேறு வாரி இறைக்கப்பட்டாலும், உண்மை என்னும் தெள்ளிய நீர் அச்சேற்றை நீக்குகிறது.

தந்தை பெரியார் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல. அவர் மறைந்து 40 ஆண்டுகள் கழிந்த பின்னரும் அவர் மீதான அவதூறுகளுக்குப் பஞ்சமில்லை.

தந்தை பெரியாரின் சித்தாந்தம் இந்த மண்ணில் விதைக்கப்பட்ட ஒன்று. பொய்யர்களின் புரட்டு மொழியால், சித்தாந்தம் வீழ்ந்து விடாது. இக்காரணத்தால்தான், சிறிது காலத்திற்கு முன்பு பெரியார் சிலை குறித்துப் பொருந்தா வாசகங்களைப் பேசியவனை எதிர்த்துத் தமிழகமே கனன்று எழுந்தது.

காலங்காலமாகப் பெரியார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் ஒன்று, அவர் ஆதிக்க சாதியினருக்கு மட்டுமே ஆதரவானவர் என்பது. இக்குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் தக்க

> தந்தை பெரியாரை, தந்தை பெரியாராகப் பார்க்காமல் ‘தலித்’ பெரியாராக நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது தமிழ்ச் சமூகத்தின் தீயூழ். அம்பேத்கரை தலித் தலைவராக மட்டுமே சுருக்குவதும் இத்தகைய தீயூழ் தான். (நூலின் பக்கம் – 27)

பதிலாகத் தற்போது வெளிவந்துள்ளது, திருமாவேலன் எழுதிய ‘ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியாரா?’ என்னும் நூல்.

ஏற்கனவே இப்பொருள் குறித்து, ‘தந்தை பெரியாரும் தாழ்த்தப்பட்டோரும் (தஞ்சை ஆடலரசன்), நீடாமங்கலம்: சாதியக் கொடுமையும் திராவிட இயக்கமும் (திருநீலகண்டன்) போன்ற நூல்கள் வந்திருக்கும் நிலையில், இந்நூல் மிக விரிவான விளக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

தந்தை பெரியார் மீதான குற்றச்சாட்டுகளை வரிசைப்படுத்தும் நூலாசிரியர், அவை எல்லாவற்றையும் தகுந்த சான்றுகளோடு மறுக்கிறார். பல குற்றச் சாட்டுகளுக்குத் தந்தை பெரியாரின் வாசகங்களிலிருந்தே விடை தருவதோடு, உள்நோக்கத்தோடு அவதூறு பரப்புபவர்களைக் கடுமையாகச் சாடுகிறார். முக்கியமாக, கீழ்வெண்மணி மற்றும் முதுகுளத்தூர் நிகழ்வுகள் தொடர்பாகத் தந்தை பெரியார் மீதான அவதூறுகளை எண்ணற்ற சான்றுகள் மூலம் தகர்த்தெறிகிறார். கீழ்வெண்மணி நிகழ்வில், அறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.க. அரசின் நேர்மையான நிலைப்பாடுகளையும் தக்க சான்றுகளோடு நிறுவுகிறார். எண்ணற்ற ஆதார நூல்களின் உதவியோடு, பத்தாண்டுக்கும் மேலான உழைப்பில் உருவாகியுள்ள இந்நூல், நூலன்று, தந்தை பெரியாரின் மீதான அவதூறுகளை அழித்தொழிக்கும் வேல் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கிப் படிக்க வேண்டிய நூல் இது

(இம்மாதம் 27ஆம் தேதி வரையில், சென்னை ராயப்பேட்டை ஒய். எம். சி. ஏ. வில் நடைபெறும் சென்னை புத்தகத் திருவிழாவில் இந்நூல் விற்பனைக்குக் கிடைக்கும்.) ●

**வெற்றிச்செல்வன்**




| | | |
|---|---|---|
| ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியாரா? | | |
| ஆசிரியர் | : | ப. திருமாவேலன் |
| வெளியீடு | : | நற்றிணைப் பதிப்பகம், சென்னை-5 |
| விலை | : | 300/- |




Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.